# புரட்சிக் கவியின் புகழ் வாழ்க!



நீந்தும் கப்பல் மூழ்கி விடாமல்
 நிறுத்தும் நங்கூரம்! அந்த
நெடிய வெற்பையும் இடித்திடும் தோள்கள்!
 நிமிர்ந்த கம்பீரம்!
பூந்தமி முக்குத் தீங்கொன்று வந்தால்
 பொங்கிடும் வெங்கோபம்! மொழிப்
போருக்குத் தீட்டிய வரிகள் அனைத்தும்
 பூபாளச் சங்கீதம்!

தமிழுக்கும் அமுதென்று பேர்என்று கூவினான்!
 தடந்தோள் உரமூட்டி! அவன்
தாலாட்டுப் பாட்டிலும் எழுப்பிவிட் டான்!நமைத்
 தன்மான உணர்வேற்றி!
சிமிழுக்குள் கிடந்த தமிழுக்குத் தந்தான்
 சிறகுகள்! ஒளிகூட்டி! எட்டுத்
திசைகளும் தமிழை வணங்கவைத் தான்!மலைச்
 சிகரத்தில் கொடிநாட்டி!

கொஞ்சும் அழகின் சிரிப்பால் இன்பம்
 கொடுத்தான் துயர்மாற்றி! சுடர்
கொளுத்தி மகிழ்ந்தான் இருண்ட வீட்டிலே
 குடும்ப விளக்கேற்றி!
தஞ்சம் வந்தமொழி தமிழை ஆளவோ?
 தடுத்தான் இடர்வீழ்த்தி! இளந்
தமிழச்சி கையில் கத்தி கொடுத்தான்
 தாய்த்தமிழ் நிலம்வாழ்த்தி!

கழுத்துப் பிடரி சிலிர்க்க எழுந்தான்
 கண்களில் அனல்தேக்கி! இங்குக்
கால்வைத் திடுமோ இந்தி?என்று ஆர்த்தான்
 களத்தில் பகைநோக்கி!
எழுத்து வடிவில் நெருப்பை உமிழ்ந்தான்
 எரிமலை உண்டாக்கி! அவன்
எடுத்துப் பிடித்தது எழுதுகோல் அல்ல!
 எந்திரத் துப்பாக்கி!

மைந்தர்களே, தமிழ் அன்னையைக் காக்க
 வருகெனக் குரல்கொடுத்தான்! இங்கு
மானுடச் சமுத்திரம் நான்என்று கூவும்
 மகத்துவம் அவன்படைத்தான்!
பைந்தமிழ் எங்கள் உயிர்என்று கூறிப்
 பாட்டில் முரசொலித்தான்! தமிழ்ப்
படைமறம் காட்டிப் பகைவரை வெல்லப்
 பாண்டியன் பரிசளித்தான்!

வீரத் தமிழ்க்கவி இன்றிருந் தால், புது
 வீறுடன் நின்றிருப்பான்! தமிழ்
வெற்றி மாலையை முதல்வர்க்குச் சூட்ட
 விரும்பிச் சென்றிருப்பான்!
பேரன் "தளபதி" ஆட்சியின் மாட்சிப்
 பெருமையைக் கண்டிருப்பான்! உயர்
பீடு மிகும்தமிழ் நாடும் இதுவெனப்
 பெருமிதம் கொண்டிருப்பான்!

அதிர்வலை தந்த எழுச்சிக் கவிஞன்!
 அவன்தன் தாள்வாழ்க! அவன்
அள்ளிப் பொழிந்த அருவி நிகர்த்த
 அமுதத் தமிழ்வாழ்க!
புதுவைப் புலவன் காண விழைந்த
 புதுமைப் புவிவாழ்க! புகழ்
போற்றிக் கூடுவோம்! ஏற்றிப் பாடுவோம்!
 புரட்சிக் கவி வாழ்க!



**கவிச்சுடர்**
**கவிதைப் பித்தன்**

## வனத்துறையின் தொடர் முயற்சியால் – நீலகிரி காட்டுத் தீ கட்டுப்படுத்தப்பட்டது!

*நீலகிரி, ஏப். 30-*

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை தொடர்ச்சியான முயற்சிகளின் விளைவாக, நீலகிரி காட்டுத்தீ முழுவதுமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

நீலகிரி மாவட்டம் இந்த ஆண்டு பல காரணங்களால் மிகக் கடினமான காட்டுத்தீ காலத்தை எதிர்கொள்கிறது. இந்த நிலையில் வென்லாக் டவுன்ஸ் காப்புக் காட்டில் ஏற்பட்ட காட்டுத்தீ மிக வேகமாக பரவியது. அதிக வெப்ப நிலை, குறைந்த ஈரப்பதம் மற்றும் பலத்த காற்று ஆகியவை இணைந்து உலர்ந்த தாவரங்களை எளிதில் எரியக் கூடிய எரிபொருளாக மாற்றி தீயின் தீவிரத்தைக் அதிகரித்தன.

அதிக வெப்பம் மற்றும் குறைந்த ஈரப்பதம் காரணமாக உலர்தன்மை அதிகரித்து தீ எளிதில் பற்றிக்கொண்டு வேகமாக பரவியது மேலும் பலத்த காற்று தீக்கனல்களை முன்புறம் கொண்டு சென்று தீ பரவலை அதிகரித்தது. நீலகிரியின் மலைப்பாங்கான நில அமைப்பும் தீயணைப்பு பணிகளில் சவால்களை ஏற்படுத்தியது. சரிவுகள் மற்றும் கணிக்க முடியாத காற்று திசைகள் தீ கட்டுப்பாட்டை கடினமாக்கின.

15.04.2026 அன்று பார்சன்ஸ் வேலி சரகத்தின் வென்லாக் டவுன்ஸ் காப்புக் காட்டில் காட்டுத்தீ ஏற்பட்டதாக தகவல் கிடைத்ததும் உள்ளூர் வனத்துறை குழுக்கள் உடனடியாக பணியில் ஈடுபட்டன. மாநிலம் முழுவதும் இருந்து 500-க்கும் மேற்பட்ட வனத் துறை பணியாளர்கள் மற்றும் 6 மாவட்ட வன அலுவலர்கள் இணைந்து தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தனர். மேலும் 7 மாநில வனத்துறை தீயணைப்பு வாகனங்கள் முக்கிய இடங்களில் நிலைநிறுத்தப்பட்டன. தமிழக மாநில பேரிடர் மீட்பு படையிலிருந்து 60 பேர் கொண்ட இரு அணிகள் மற்றும் தீயணைப்பு துறையினரும் பணியில் ஈடுபட்டனர். மேலும் 100க்கும் மேற்பட்ட உள்ளூர் சூழல் மேம்பாட்டு குழு உறுப்பினர்கள் உதவி செய்தனர். தீ மிகுந்த தீவிரம் கொண்டிருந்ததால் வான்வழி உதவி கோரப்பட்டது.

நிலைமைக்கிணங்க மாவட்ட வன அலுவலர் கோரிக்கையின் பேரில் மாவட்ட ஆட்சியர் மாநில பேரிடர் மேலாண்மை அமைப்பின் மூலம் ஹெலிகாப்டர் உதவியை கோரினார். சூலூரிலிருந்து 25.04.2026 அன்று வந்த விமானப்படை குழு ஹெலிகாப்டர் மூலம் தண்ணீர் தெளித்து தீயை கட்டுப்படுத்த உதவியது. பின்னர் வானிலை உகந்ததாக இல்லாததால் ஹெலிகாப்டர் பயன்பாடு நிறுத்தப்பட்டது.

இந்த தீ பெரும்பாலும் தரை மட்டத்தில் பரவிய தீயாகும் செஸ்ட்ரம், யூலெக்ஸ், ஸ்காட்ச்ப்ரூம் மற்றும் உலர்ந்த வாட்டில் போன்ற அந்நிய களைகள் தீ பரவலுக்கு காரணமாக இருந்தன. மனித குடியிருப்புகள் எதுவும் பாதிக்கப்படவில்லை, சோலா காடுகளில் தீ ஏற்படவில்லை. தீ பரவலை கட்டுப்படுத்த தீ தடுப்பு கோடுகள் அமைத்தல், அகழிகள் தோண்டுதல், மோட்டார் பம்புகள் பயன்பாடு, நவீன தீயணைப்பு வாகனங்கள் மற்றும் கைமுறை தீயணைப்பும் பயன்படுத்தப்பட்டன.

மாநில தலைமையகமான சென்னை நகரில் மாநில வனத்தீ கட்டுப்பாட்டு மையம் செயல்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டில் நபார்டு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் மாவட்ட வனத்தீ கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் உள்ள வென்லாக் டவுன்ஸிலும் இது செயல்படுகிறது. இந்த மையங்கள் 24 மணி நேரமும் தீ எச்சரிக்கைகளை கண்காணித்து உடனடியாக களப் பணியாளர்களுக்கு தகவல்களை வழங்குகின்றன.

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் நவீன தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த தீயணைப்பு பணியில் நீலகிரி வனப்பிரிவில் 7 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் சிறப்புச் செயலாளர் ஆகியோர் 27.04.2026 அன்று களப் பகுதிகளை ஆய்வு செய்தனர். தற்போது தீ முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மீண்டும் காட்டுத்தீ பரவாமல் தடுக்க களப்பணியாளர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். தலைமைச் செயலாளர் மற்றும் மூத்த அதிகாரிகளால் நீலகிரி காட்டுத்தீ நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.




தலைமைத் தேர்தல் அதிகாரி / அரசு முதன்மைச் செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், நேற்று (29.04.2026), 2026–தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற வாக்கு எண்ணும் செயல்முறை குறித்த பயிற்சியில் கலந்து கொண்டு, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (Returning Officers), உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள்(Assistant Returning Officers), மாவட்ட கணினி நிரலாளர்கள்(District Programmers) மற்றும் உதவி கணினி நிரலாளர்கள்(Assistant Programmers) ஆகியோர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

### கோவை தெற்கு மாவட்டம் - சூலூர் - பொள்ளாச்சி - கிணத்துக்கடவு - வால்பாறை

## சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுக்கு நன்றி!

### கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் அறிக்கை !

*கோவை, ஏப். 30-*

கோவை தெற்கு மாவட்டம் சூலூர், பொள்ளாச்சி கிணத்துக்கடவு, வால்பாறை சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளுக்கு கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தனது அறிக்கையில் கூறியதாவது : கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் சூலூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக "உதயசூரியன்" சின்னத்தில் களத்தில் நின்ற போது, என்னுடன் உணர்வோடு பயணித்து, தொடர்ந்து பிரச்சாரம் செய்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் அனைத்துக் கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், எல்லா வகையிலும் உறுதுணையாக நின்ற கழக நிர்வாகிகளுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், ஆதரவு தெரிவித்து வாக்களித்த அனைத்து நல்வுள்ளங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



இதேபோல் பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கொங்கு நாடு தேசிய மக்கள் கட்சி சார்பில் நித்தியானந்தம் "உதயசூரியன்" சின்னத்தில், கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் சபரி கார்த்திகேயன் "உதயசூரியன்" சின்னத்தில் வால்பாறை சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் குட்டி (எ) சுதாகர் "உதயசூரியன்" சின்னத்தில் போட்டியிட்டனர்.

பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதி கொங்கு நாடு தேசிய மக்கள் கட்சி வேட்பாளர் நித்தி யானந்தம், கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் சபரி கார்த்திகேயன், வால்பாறை சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் குட்டி (எ) சுதாகர் ஆகியோருக்கு "உதயசூரியன்" சின்னத்தில் வாக்களிக்க உழைத்த கழக நிர்வாகிகள் அனைவருக்கும், அதே போல் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் உள்ளிட்ட அனைவருக்கும் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி சார்பிலும், கோவை தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கோவை மாநகர் மாவட்டம் கோவை தெற்கு - கோவை வடக்கு - சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிகளில்

## தேர்தல் பணியாற்றிய கழக - கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு நன்றி!

### மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் அறிக்கை!

கோவை, ஏப்.30–

கோவை மாநகர் மாவட்டம், கோவை தெற்கு, கோவை வடக்கு சிங்கா நல்லூர் சட்டமன்றத் தொகுதிகளில் தேர்தல் பணி யாற்றிய தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு மாநகர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரி வித்துள்ளார்.

இது குறித்து கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

கோவை மாநகர் மாவட்டம் கோவை தெற்கு , கோவை வடக்கு சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிகளில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் கழக வேட்பாளர்களாக கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதியில் "உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி,



கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் "உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பா ளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் ஆகிய எனக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதியில் "கை சின்னத்தில் போட்டியிட்ட ஸ்ரீ நிதி ஆகியோருக்காக கண் துஞ்சாது தேர்தல் பணி மேற் கொண்ட திராவிட முன்னேற்ற கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் அனைவருக்கும் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி சார்பிலும், கோவை மாநகர் மாவட்ட கழகத்தின் சார்பிலும், எனது சார்பிலும் நெஞ் சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்ற சாதனைகளை ஒவ்வொன்றாக வீடுகள் தோறும் எடுத்துக்கூறி "உதய சூரியன் சின்னத்திற்கும், "கை சின்னத்திற்கும் வாக்கு சேகரித்த மாநில, மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப் பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தோழர்கள் உள்ளிட்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கோவை வடக்கு மாவட்டம் - தொண்டாமுத்தூர் - மேட்டுப்பாளையம் - கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதிகளில்

## தேர்தல் பணியாற்றிய கழக - கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு நன்றி!

### கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை!

*கோவை, ஏப். 30 -*

கோவை வடக்கு மாவட்டம் தொண்டாமுத்தூர் மேட்டுப்பாளையம் கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் பணியாற்றிய தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள் ளார்.

இது குறித்து கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

கோவை வடக்கு மாவட்டம் தொண்டாமுத்தூர் மேட்டுப்பாளையம் கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதிகளில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக "உதயசூரியன்" சின்னத்தில் என்.ஆர். கார்த்திகேயன், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக உதய சூரியன் சின்னத்தில் கவிதா கல்யாண சுந்தரம், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் கே. பி.சூர்யபிரகாஷ் "கை" சின்னத்தில் போட்டியிட்டனர்.

தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் என்.ஆர். கார்த்திகேயன், மேட்டுப்பாளையம் சட்ட மன்றத் தொகுதி கழக வேட்பாளர் கவிதா கல்யாணசுந்தரம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி வேட்பாளர் கே.



பி.சூர்ய பிரகாஷ் ஆகியோருக்காக கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் மேற் கொள்ளப்பட்ட திட்டங்களின் சாதனைகளை ஒவ்வொன்றாக வீடுகள் தோறும் எடுத்துக்கூறி கண் துஞ்சாது தேர்தல் பணி மேற் கொண்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வார்டு கழக, கிளைகழகசெயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி சார்பிலும், கோவை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பிலும், மாவட்ட கழக செயலாளர் ஆகிய எனது சார்பிலும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.